<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

**OS. No.** 48/2020 **Date**: 15.04.2025

**PW**2-ஜெகதீஸ்வரன்

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னிடம் காண்பிக்கப்படும் கிரைய ஒப்பந்த இரத்து பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பமிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.1. அதில் மற்றோரு சாட்சியாக கையொப்பமிட்டுள்ள ராஜேந்திரன் என் சகோதரர். அந்த ஆவணம் சிதம்பரம் என்பவர் அருணாசலம் வகையாறாவிற்கு எழுதி கொடுத்தது என்றால் சரிதான். நான் மேற்படி சிதம்பரம் இத்தாவா வாதி தங்கவேலுவிற்கு அக்கா கணவர் என்றால் எனக்கு தெரியாது. தங்கவேலுவின் மகளை சிதம்பரத்தின் மகனுக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. சிதம்பரம் ரியல் எஸ்டேட் மற்றும் வட்டி தொழில் செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது. தாவா கிரைய ஒப்பந்தம் எங்கு வைத்து எப்போது பேசப்பட்டது என்று எனக்கு தெரியும். வா.சா.ஆ.1 ல் எனக்கு முன்பு 4 பேர் கையெழுத்து செய்திருந்தார்கள். அந்த 4 கையெழுத்து தவிர வேறு கையெழுத்து எதுவும் அதில் இல்லை. நான்கு பேரில் யார் முதலில் கையெழுத்து செய்தார்கள் யார் பின்னிட்டு கையெழுத்து செய்தார்கள் என்று எனக்கு தெரியும். ராஜேந்திரன் முதலில் கையெழுத்து செய்தார். நானும், தங்கவேலுவும் ஒரே சமூகத்தினர் இல்லை. தாவா ஒப்பந்தம் செந்தில்குமார் அலுவலகத்தில் வைத்து பேசப்பட்டது. என்னை டீ கடையில் இருந்து அழைத்து சென்றதாக நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. செந்தில்குமார் அலுவலகத்தில் வைத்து பேசப்பட்டதாக நான் சொல்லவில்லை. வில்லங்க சான்றிதழை வாங்கி பார்த்தாயா என்று நான் தங்கவேலுவிடம் கேட்கவில்லை. சொத்தை கிரையம் பேசும் போது வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்க்க வேண்டும் என்று எனக்கு தெரியும். தாவா சொத்தின் ஜக்குபந்தி எனக்கு தெரியாது. தாவா சொத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. பி.வா.சா.ஆ.1 ல் இன்னார் என்று ரூபித்தவர் என்ற இடத்திலும் நான் கையொப்பம் செய்துள்ளேன். சிதம்பரத்தை நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் இன்னார்

என்று அடையாளம் காண்பித்துவிட்டு தற்போது அவர் யார் என்றே தெரியாது என பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சிதம்பரத்திற்காக ரியல் எஸ்டேட் மற்றும் வட்டி தொழில் உறுதுணையாக இருந்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் அருணாசலம் சொல்லி பி.வா.சா.ஆ.1 ல் கையெழுத்து செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கு சிதம்பரத்தை யார் என்றே தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சிதம்பரம் கேட்டுக்கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வா.சா.ஆ 1 பற்றி எதுவும் தெரியாமல் வாதியும் சிதம்பரமும் கேட்டு கொண்டதற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-ஜெகதீஸ்வரன்

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.